# கிராமிய விடுமுறை வேதாகமப் பள்ளி

## VBS- ஆசிரியர் கையேடு



# செப்பனிடு

கருத்து வசனம்

"களிமண் குயவன் கையில் இருக்கிறதுபோல
நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்."
(எரேமியா 18:6)

## அன்பான VBS ஆசிரியர்களே!

நேசர் இயேசுவின் நேசமான பெயரில் உங்களுக்கு எங்கள் அன்பின் வாழ்த்துக்கள்.

உங்களுக்கென்று வைத்துக்கொள்ள உங்களிடம் 2 மெழுகுவர்த்திகள் கொடுக்கப்படுகிறது. அதில் ஒன்று பாதி எரிந்தது, மற்றொன்று எரியாத முழு மெழுகுவர்த்தி. அதில் எதை எடுப்பீர்கள் ? எரியாத மெழுகுவர்த்தியைத்தானே! ஏனெனில் அது நீண்ட நேரம் எரியும். அந்த முழு மெழுகுவர்த்திதான் உங்களிடம் கொடுக்கப்பட்ட பிள்ளைகள். அந்த பிள்ளைகள் கர்த்தருக்காக எழும்பி பிரகாசிக்க தேவன் உங்களிடம் கொடுத்துள்ளார். உங்களிடம் கொடுக்கப்பட்ட இந்த நாட்களில் இரட்சிப்பு என்கிற சிறு நெருப்புப்பொறி பட பிரயாசப்படுவோம். தீக்குச்சி தேய்க்கப்படும்போது நெருப்பு பிடிக்கிறது. அதினால் மெழுகுவர்த்தி ஏற்றப்படுகிறது. அதுபோல நாமும் தீக்குச்சியாய் இந்த நாட்களில் கர்த்தருக்காக நம்மை விட்டுக்கொடுத்து நம்மிடம் கொடுக்கப்பட்ட பிள்ளைகள் எழும்பி பிரகாசிக்க முயற்சி எடுப்போம். சகல பிரயாசத்திற்கும் பிரயோஜனமுண்டு. உங்கள் கிரியையையும் உங்கள் அன்பின் பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே. உங்களிடம் உள்ள பிள்ளைகளை வருங்கால சுவிசேஷர்களாய், ஊழியர்களாய், தலைவர்களாய் தேவன் மாற்றுவார். ஆமென்.

**சிறப்பான ஆசிரியராக திகழ சில ஆலோசனைகள்:** நீங்கள் திறமையான ஆசிரியராக திகழ முக்கிய தகுதி எதுவென்று நினைக்கிறீர்கள்? நம் இயற்கையான திறமைகளோ, தாலந்துகளோ, வேத அறிவோ, பல ஆண்டுகளாக ஏகூஷஸ ஆசிரியராக பணியாற்றிய அனுபவமோ அல்ல! மாறாக முற்றிலும் ஆண்டவரையே சார்ந்திருக்கும் அனுபவமே ஆகும். முதலாவதாக தேவகரத்தில் உங்களை ஒப்படையுங்கள். உங்கள் வாழ்விலுள்ள, தேவனுக்கு பிரியமில்லாத காரியத்தை அறிக்கையிட்டு, உண்மையாய் உங்கள் பணியை நிறைவேற்றுவதற்கான தேவபெலனை பெற்றுக்கொள்ள தாழ்மையாய் ஜெபியுங்கள்.

உங்களுக்கு முன்பாக சரியான ஆடையின்றி, சுத்தமின்றி அமர்ந்திருக்கும் ஒவ்வொரு பிள்ளைகளையும் வருங்கால மிஷனெரியாக, சபைத் தலைவராக, சுவிசேஷகராக, தேசத்தலைவராக எண்ணி அன்புடன் வசனங்களைக் கற்றுக் கொடுங்கள். ஆம், நிச்சயமாய் உங்களிடம் பயிலும் மாணவர்கள் உலகை கலக்குகிறவர்களாய் மாறுவார்கள். இவர்களின் பெயர்களை உங்கள் டைரியில் எழுதி வைத்து ஏகூஷஸ முடிந்த பிறகும் ஒவ்வொரு நாளும் இவர்களுக்காக ஜெபிப்பீர்களானால் இவர்கள் தொடர்ந்து சத்தியத்தில் நிலைத்திருக்க தேவன் அருள்புரிவார். நாம் நம் வேலையை உண்மையாய் செய்வோம். மற்ற எல்லாவற்றையும் தேவன் பார்த்துக்கொள்வார்.

**இயேசுவின் பணியில்**
**K. டேவிட் கணேசன்**



## மனப்பாட வசனம் போதித்தல்



மாணவர்கள் வசனத்தை மனப்பாடம் செய்வதைக் கடினமாகக் கருதாதபடி, நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கி, அவர்களின் ஆர்வத்தை தூண்டிவிடும் விதத்தில் கற்றுக் கொடுக்க ஆசிரியர்களாகிய நீங்கள் முயற்சியெடுங்கள். மனப்பாட வசனத்தை ஆசிரியரும் மனப்பாடம் செய்துகொள்ள வேண்டும்.

- கையில் வேதாகமத்தை வைத்து, ஆசிரியர் சொல்லச் சொல்ல பிள்ளைகளை திரும்பச் சொல்லச் சொல்லலாம்.
- கரும்பலகையில் வசனத்தை இருப்பிடத்தோடு எழுதி வைத்து கற்றுக்கொடுக்கலாம்.
- செய்கையோடு கற்றுக் கொடுக்கலாம்.
- ஆண் குழந்தைகள். பெண்குழந்தைகள் என மாறி மாறி சொல்ல வைக்கலாம்.
- வசனத்தை பேப்பரில் எழுதி துண்டு துண்டாக வெட்டி பின் அதை பிள்ளைகளைக் கொண்டு சரியாக இணைக்கச் செய்யலாம்.
- சிறப்பாய்ச் சொன்ன பிள்ளைகளை ஊக்குவிக்கும் விதமாக சிறிய சிறிய பரிசுகளை கொடுங்கள்.

## சிறப்பாய் கதை சொல்லுதல்



- அவசர அவசரமாக ஆயத்தம் செய்யாமல் ஜெபத்துடன் ஆயத்தம் செய்ய வேண்டும்.
- கடமைக்காக சொல்லாமல், அதற்குரிய படங்களை சேகரித்துக்கொண்டு கதை சொல்லவேண்டும்.
- பலமுறை சொன்ன வேதாகம கதையானால் இன்னும் கவனத்துடன் சத்தியத்தை ஆராய்ந்து சொல்ல வேண்டும்.
- புரியாத கடின வார்த்தைகளை தவிர்த்து அவர்களின் வயதிற்கேற்றாற் போல் எளிய வார்த்தைகளில் கூற வேண்டும்.
- கதையை முகபாவனையோடு சொல்ல வேண்டும். (அழுவது, சிரிப்பது, கோபப்படுவது)
- கதை சொல்லும்போது மேலே பார்ப்பது, ஒரே பக்கம் பார்ப்பது, கண்ணை மூடிக்கொண்டு சொல்வது கூடாது. உங்கள் கண்கள் எல்லா சிறுவர்கள் மேலும் இருக்க வேண்டும்.
- இந்த கதை தெரியுமா? என்ற கேள்வி கேட்காமல், முன்பு Sunday Classல் சொன்ன கதையானாலும் வித்தியாசமாக ஆரம்பித்து சொல்லுங்கள். சொல்லும் கதையோடு மற்றொரு கதையை நுழைக்கக் கூடாது.
- எல்லா சத்தியத்தையும் கதையின் முடிவில் சேர்த்து சொல்லக்கூடாது. கதையை ஆர்வமாக கேட்கும்போதே சத்தியத்தை இடையிடையே சொல்ல வேண்டும்.
- கதை முடிந்த பின் நீண்ட ஜெபம் செய்யாமல், அவர்கள் தங்களை அர்ப்பணிக்கும் விதத்தில் கருத்தான சிறிய ஜெபத்தை செய்து கூடவே அவர்களையும் திரும்ப சொல்ல வைக்கவேண்டும்.
- கதை சொல்லுவது என்பது சிறு பிள்ளைகளுக்கு பிரசங்கம் செய்வது என்பதை மறக்க வேண்டாம்.

## ஆசிரியருக்கு தேவன் தரும் கட்டளை

**". . . நீ இந்தப் பிள்ளையை . . . . எனக்கு வளர்த்திடு, நான் உனக்குச் சம்பளம் கொடுக்கிறேன் . . . ."(யாத். 2:9)**

தாம் தெரிந்து கொண்ட மோசே என்ற ஒரு மனிதனை காப்பாற்ற, தேவன் வைத்திருந்த திட்டத்தில், பலரை பயன்படுத்துகிறார். மோசேயை மிகப்பெரிய தலைவனாய் உருவாக்க தேவன் பயன்படுத்தியோர் அநேகர். அவர்களில் ஒருசிலரைப் பற்றி காண்போம்.

**தேவதிட்டத்தில் தாதிமார்:-**

பிறக்கும் ஆண்பிள்ளைகளையெல்லாம் கொன்றுவிட வேண்டும் என்பது தாதிமாருக்கு கொடுக்கப்பட்ட ராஜாவின் கட்டளை! ஆனால் ராஜகட்டளையைவிட இவர்கள் தேவனுக்கு பயந்ததினால் மோசேயைக் காப்பாற்றினர். இப்படித்தான் நாம் சந்திக்கப்போகும் புறமத பிள்ளைகளின் ஆத்துமாக்களை காப்பாற்றக்கூடாதபடி ஊர்த்தலைவர்களின் கட்டளை இருக்கலாம். குடும்பத்தாரின் எதிர்ப்பு இருக்கலாம். இருப்பினும் நீங்கள் தேவன் உங்களுக்கு கொடுத்த கட்டளையின்படி அன்புடன் தைரியமாய் சுவிசேஷம் அறிவியுங்கள்.

**தேவதிட்டத்தில் மிரியாம்:-**

தனக்குக் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி அரசரின் மகளிடம் தைரியமாய் சென்று பேசினாள், குட்டி மோசேயின் அக்கா மிரியாம். அவளது ஞானமான பேச்சு மோசேயை மீண்டும் தாயிடமே கொண்டுவந்தது. (யாத். 2:7,8) நாமும் இந்த 5 நாட்களும் நமக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பை கச்சிதமாக, ஞானமாக பயன்படுத்துவோம்.

**தேவதிட்டத்தில் நீங்கள்:-**

இந்த VBSல் உங்கள் கரங்களில் கொடுக்கப்பட்ட பிள்ளைகளைக்



குறித்த தேவதிட்டத்தில், நீங்கள் ஒரு முக்கிய நபர் என்பதை ஒருபோதும் மறக்கவேண்டாம். ஆகவே அவர்களை ஒரு மோசே-யாக, எஸ்தராக தரிசன கண்களில் பாருங்கள். ஒருநாள் வரும், அன்று நீங்கள் வழிநடத்தின பிள்ளைகளை தேவஊழியனாய் கண்டு மகிழ்வீர்கள்.

### <u>சிறுபிள்ளைகளை புரிந்து கொள்ளுங்கள்:</u>

**ஆரம்பநிலை (4-7 வயது):** இவர்களது கவனிக்கும் திறன் 10–15 நிமிடங்கள் மட்டுமே. கற்பதில் ஆர்வம் கொண்டிருப்பர். காரியங்களை அறியவும் புரிந்துகொள்ளவும் தீவிரமாய் முயலுவர். அதிகமாக கேள்வி கேட்பர். உங்கள் பதில் சுருக்கமாயும், தெளிவாகவும் இருக்கட்டும்.

**இளநிலை (8-12 வயது) :** இவர்களது கவனிக்கும் திறன் 15–20 நிமிடங்கள் மட்டுமே. மிகவும் துறுதுறுவென்று இருப்பார்கள். வீட்டிலும், பள்ளியிலும் சிலரை ஹீரோக்களாக கொண்டாடுவார்கள். இவர்களுக்கு இயேசு, தானியேல், யோசேப்பு போன்ற வேதாகம ஹீரோக்களைப் பற்றி அறிவதில் ஆர்வமிருக்கும்.

# பாடல்கள்

**ஜெபப் பாடல்**

சின்ன கண்கள் மூடி
சின்ன கைகள் கூப்பி
சின்ன சின்ன ஜெபம் செய்வேன்
இயேசப்பா –2

கல்லான இருதயத்தை
மாற்றிடுங்கப்பா
உணர்வுள்ள இருதயத்தை
தந்திடுங்கப்பா –2
இரத்தத்தாலே கழுவி செப்பனிட்டு
என்னை
உம் பிள்ளையாக மாற்றிடுங்கப்பா
இரத்தத்தால் கழுவி செப்பனிட்டு
என்னை உம் சாயலாய்
மாற்றிடுங்கப்பா
–இயேசப்பா என்னை

**கருத்துப் பாடல்**

குடுகுடு, குடுகுடு, குடுகுடு
குடுவென ஓடிப்போனேனே –
குயவன் வீட்டுக்கு
கடகட, கடகட, கடகட கடவென
ஏறிப்போனானே – குயவன் மண்ணு
மேட்டுக்கு

மண்ண வெட்டி தண்ணிய ஊத்தி
காலால மிதிச்சி, மண்ண கொளச்சி

சரசர, சரசர, சரசர சரசரவென
சக்கரத்தை சுத்தி – களிமண்ண
வெச்சி
படபட, படபட, படபட படவென
பானை செஞ்சாரே –
களிமண் பானை செஞ்சாரே

பழுதில்லா பானை பட்டுன்னு உடைய
கரங்களில் எடுத்து புதிதாய்
வனைந்தாரே
சடசட, சடசட, சடசட சடவென
ஓடி வருவாயே தம்பி (தங்கை)
ஓடிவருவாயா – இயேசுவிடம்
ஓடிவருவாயா
உன்னை தருவாயே இயேசுவுக்கு
உன்னை தருவாயே
கலகல, கலகல, கலகல கலவென
கலர்புல் ஆவாயே – நீயும் கலர்புல்
ஆவாயே

**நாள் 1**

நான் ஒரு வழிப்போக்கனுங்க
திருடர் கையில் அகப்பட்டேங்க –2
அடி அடின்னு அடிச்சு
காசை எல்லாம் எடுத்துக்கிட்டு
குற்றுயிரா விட்டுட்டு
போய்ட்டாங்க–2
அந்த வழிப்போன ரெண்டு பேரும்
தொடல
கத்தி கத்தி பார்த்தேன்
கண்டுக்கவேயில்ல

என்னைத் தேடி ஒருவர் அருகில்
வந்தார்
சாக கிடந்த என்னையும்
காப்பாற்றினார்
தம்பி தங்க போற எங்க
இயேசு சாமி இருக்காரு இங்க

உன் காயப்பட்ட மனச
அவர் காயங்கட்டுவார்
நீ காலமெல்லாம் வாழ்வதற்கு
பாதை காட்டுவார்

# பாடல்கள்

## நாள் 2

ஆழத்தில வலை போட்ட எனக்கு
இயேசுவின் ஆழமான அன்பு
தெரியலயே
துன்பப்படும் இயேசுவை நான்
துக்கப்படும்படி பேசி விட்டேனே
ஆனாலும் மறக்கவில்லை
என்னை விடவில்லை
தேடி வந்தாருங்க
என்ன பின்தொடர்ந்து வந்தாருங்க

பொறுப்பற்ற எனக்கு பொறுப்பை
கொடுத்தார் துரோகியாம்
எனக்கு திறவுகோல் கொடுத்தார்
ஆஹா என்ன ஜாலி
இயேசு இருந்தா எல்லாம் ஹோலி

## நாள் 3

சுற்றி சுற்றி சுற்றி சுற்றி
தேடி தேடி தேடி தேடி
ஊரெல்லாம் சுற்றிப் பார்த்தேன்
உத்தமன் இல்லை நாடெல்லாம் தேடி
பார்த்தேன் நல்லவன் இல்லை யோபு
போல

சொத்து எல்லாம் இழந்தாலும்
பிள்ளை எல்லாம் இறந்தாலும்
உடம்பு எல்லாம் புண்ணு வந்து
ஓட்டை எடுத்து சொரிஞ்சாலும்
தூசிக்கவில்லை யோபு
தூசிக்கவில்லை
முறுமுறுக்கவில்லை தேவனிடம்
முறுமுறுக்கவில்லை
திட்டி தீர்த்த மனைவிக்கும்
குற்றம் சாட்டின நண்பர்களுக்கும்
ஜெபித்தாரே யோபு ஜெபித்தாரே
பெற்றாரே blessing ஐ பெற்றாரே

அன்பு குட்டி செல்லங்களே
ஜெபித்திடுங்க
நண்பர்களை இயேசுவிடம்
சேர்த்திடுங்க–2

## நாள் 4

கேளு கண்ணு கேளு ஒரு கதை
ஒன்னு கேளு
கேளு தங்கம் கேளு ஒரு கதை
ஒன்னு கேளு (1)
அப்பாவுக்கு செல்ல புள்ள
அண்ணன்மார் வெறுத்த புள்ள (2)

சொந்த பங்காளியால் குழியில்ல
தள்ளப்பட்டான் சொந்த
பங்காளியால் காசுக்கு
விற்கப்பட்டான் (1)
செய்யாத பாவத்துக்காய் ஜெயில்ல
போடப்பட்டான்(2)
கர்த்தர் கூட இருந்ததினால்
தலைவனாய் உயர்த்தப்பட்டான்(2)

தீமை செய்த பங்காளிக்கு நன்மை
செய்து செப்பனிட்டான்(2)

யாரு கண்ணு யாரு அது யோசேப்பு
அண்ணே பாரு யாரு தங்கம் யாரு
அது யோசேப்பு அண்ணே பாரு(1)
நீயும் அதைக் கேளு யோசேப்பை
போல் மாறு
நீயும் அதை கேளு யோசேப்பை
போல் வாழு(1)

# பாடல்கள்

## நாள் 5

வந்தாரே இயேசு வந்தாரே
சொன்னாரே இயேசு சொன்னாரே

வந்தாரே வந்தாரு இயேசுசாமி
வந்தாரு
சொன்னாரே சொன்னாரு
ஒரே வார்த்தை சொன்னாரு
தன்னானே தானே தன்னானே

பதறி அடிச்சு பிசாசு
கூட்டமெல்லாம் ஓடுது
கல்லறை மனிதனை Control
பண்ணி வச்சாரு –தன்னானே

அற்புதம் அதிசயம் நடந்துச்சு பாரு –
தம்பி / தங்கை
ஆரவாரம் இல்லாம நடந்துச்சு பாரு
போலி தெக்கபோலி இயேசுவை
சொன்னாரே நாடெல்லாம் போயி
தம்பி தங்கை நீயும்
இயேசுவை சொல்லிடு
உலகெல்லாம் போயி –தன்னானே

## WORSHIP SONGS

## நாள் 1

நல்ல சமாரியன் இயேசு
என்னைத் தேடி வந்தாரே

என்னைக் கண்டாரே
அணைத்துக் கொண்டாரே

இரசத்தை வார்த்தாரே
இரட்சிப்பைத் தந்தாரே

காயம் கட்டினாரே
தோள்மேல் சுமந்தாரே

## நாள் 2

பாவங்கள் போக்கவே சாபங்கள்
நீக்கவே
பூலோகம் வந்தாரைய்யா மனிதனை
மீட்கவே
பரலோகம் திறக்கவே சிலுவையை
சுமந்தாரைய்யா – 2
கண்ணீரை துடைத்தாரைய்யா
சந்தோஷம் தந்தாரைய்யா
கண்ணீரை துடைத்தாரைய்யா
சந்தோஷம் தந்தாரைய்யா

எந்தன் இயேசுவே –4

தங்கத்தை கேட்கவில்லை
வைரத்தை கேட்கவில்லை
உள்ளத்தை கேட்டாரைய்யா
ஆஸ்தியை கேட்கவில்லை
அந்தஸ்தை கேட்கவில்லை
உள்ளத்தை கேட்டாரைய்யா
நான் தேடி போகவில்லை
என்னைத் தேடி வந்தாரைய்யா –2
எந்தன் இயேசுவே 4

## நாள் 3

சந்தோஷம் வேணுமா
சமாதானம் வேணுமா
இயேசுவிடம் வாருங்களே
துன்பங்கள் நீங்கிட
துயரங்கள் மாறிட
இயேசுவிடம் வாருங்களே (2)
இயேசு இயேசு இயேசுவாலே
எல்லாம் கூடும்
நம் இயேசு இயேசு இயேசுவாலே
எல்லாம் கூடும்
–சந்தோஷம்

# பாடல்கள்

பாவங்கள் போக்கிடுவாரே
புது வாழ்வு தந்திடுவாரே (2)
பரிசுத்தம் தந்து பரலோகம் சேர்ப்பார்
–2
இயேசுவிடம் வாருங்களே
நம் இயேசுவிடம் வாருங்களே
– சந்தோஷம்

## நாள் 4

இயேசு வந்த வீட்டிலே  சந்தோஷமே
சந்தோஷமே (3)
சந்தோஷமே
இயேசு வந்த வீட்டிலே
சண்டையில்லையே
சண்டையில்லையே (3)
சண்டையில்லையே!

இயேசு வந்த வீட்டிலே சமாதானமே
சமாதானமே (3)
சமாதானமே!

## நாள் 5

மகிழ்வோம் மகிழ்வோம் தினம்
அகமகிழ்வோம்
இயேசு இராஜன் நம்
சொந்தமாயினார்
இந்தப் பார்தலத்தின்
சொந்தக்காரர் அவர்
எந்தன் உள்ளத்தின்
சொந்தமானார்

ஆ ஆனந்தமே பரமானந்தமே
இது மாபெரும் பாக்கியமே
–இந்த பார்தலத்தின்

சின்னஞ்சிறு வயதில் என்னைக்
குறித்து விட்டார்
தூரம் போயினும்
கண்டுக்கொண்டார்
தமது ஜீவனை எனக்கும் அளித்து
ஜீவன் பெற்றுக்கொள்
என்றுரைத்தார்

அவர் வரும் நாளினில் என்னைக்
கரம் அசைத்து
அன்பாய்க் கூப்பிட்டுச்
சேர்த்துக்கொள்வார்
அவர் சமுகமதில் அங்கே
அவருடனே
ஆடிப்பாடியே மகிழ்ந்திடுவேன்

YouTube

**FOLLOW OUR PAGE**
**Village Missionary Movement**

**நாள் 1**

# செப்பனிடும் தேவன்

**வேதபகுதி**
**லூக்கா 10:30-35**

**நோக்கம்**

ஆண்டவரை விட்டு பின்வாங்கி
வாழ்க்கையின் நோக்கத்தை இழந்த நம்மை
ஆண்டவர் மன்னித்து புது வாழ்வைத் தருகிறார்.

## மனப்பாட வசனம்

**ஆரம்பநிலை:** "நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்." (சங்கீதம் 32:8)

**இளநிலை:** கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்; நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம். (சங்கீதம் 100:3)

**கதை சுருக்கம்:**

ஹலோ பிள்ளைகளே நல்லா இருக்கீங்களா? இந்த வருஷம் உங்கள மறுபடியும் பார்க்கிறதுல ரொம்ப சந்தோஷம். சரி, நம்ம ஒரு உண்மையா நடந்த சம்பவத்தை இப்பபார்க்கலாமா ? நீங்க எல்லாரும் ஊருக்கு போணும்னா எப்படி போவீங்க ? பஸ்ல போவீங்க, பைக்ல போவீங்க, கார்ல போவீங்க. கிட்டதட்ட 2000 வருஷத்துக்கு முன்னாடி கார், பைக் எல்லாம் கிடையாது கழுதையில, குதிரையில, ஒட்டகத்துல இப்படித்தான் பிரயாணம் பண்ணினாங்க. இப்படித்தான் ஒரு அண்ணே எருசலேமில் இருந்து எரிகோ என்ற ஊருக்கு போயிட்டு இருந்தாங்க. அதாவது அவங்க ஒரு வழிப்போக்கன்.அவர்களை அங்கவுள்ள கள்ளர்கள் அடித்து குற்றுயிராய் விட்டுச் சென்றனர்.அந்த வழியாய் வந்த ஆசாரியன் உதவி செய்யாமல் விலகி சென்றார்.அதுபோல அவ்வழியே வந்த லேவியனும் உதவி செய்யாமல் விலகி சென்றார்.ஆனால் அவ்வழியே வந்த சமாரியன் பார்த்து மனதுருகி அந்த அண்ணனுடைய காயங்களைக் கட்டி, அந்த அண்ணனை அவர் அந்த கழுதையில் ஏத்திக்கிட்டு பக்கத்தில் இருக்கிற சத்திரத்துக்குக் கொண்டு போய் பத்திரமா சேர்த்துக்கிட்டாங்க. அடுத்த நாள் போகும்போது அந்த சத்திரக்காரனிடம் கொஞ்சம் பணத்தையும் கொடுத்து நீங்க இவன பத்திரமா பார்த்துக்கோங்க, நீங்க இவனுக்கு எக்ஸ்ட்ரா ஏதாவது செலவு பண்ணினா அதையும் நான்அடுத்து வரும்போது உங்களுக்கு கொடுத்து விடுகிறேன்னு சொல்லிட்டு போய்ட்டாங்க.

அருமையான தம்பி தங்கச்சி நீங்களும் நானும் தான் அந்த வழிப்போக்கன். பிசாசு நம்மள காயப்படுத்தி இயேசப்பாவை விட்டு பிரிச்சி, யாரும் கேட்பாரற்று, நம்மள தனியா விட்டுட்டான். அந்த சமாரியன் தான் இயேசப்பா! இயேசப்பா நம்மகிட்ட வந்து நம்ம செஞ்ச பாவத்தை எல்லாம் மன்னிச்சு, நம்மள காயம் கட்டி, நம்மள பத்திரமா பார்த்துகிட்டாரு, இன்னைக்கும் இயேசப்பா நல்ல சமாரியனாக உங்களைத் தேடி வந்திருக்கிறார். நீங்க தவறு செஞ்சு இயேசப்பாவை

விட்டு ரொம்ப தூரம் போயிட்டீங்க, போயிட்டாலும் நாம் அவரிடம் உதவி செய்யும் படி கேட்கும்போது நம் மேல மனதுருகி, நம்மள மன்னிச்சு, நம்ம பாவத்தை எல்லாம் அவருடைய இரத்தத்தினால கழுவி, நம்மள பத்திரமா பராமரித்துக் கொள்வார். இயேசப்பா உன் வாழ்வை செப்பனிடும்படி உன்னுடைய வாழ்க்கையை இயேசு சாமி கிட்ட கொடுப்பாயா ? உடைஞ்சு போன நம்முடைய வாழ்வை சரிப்படுத்தி செப்பனிடுகிறார். அவர் மட்டும்தான் நம்முடைய வாழ்வை சரிப்படுத்த முடியும். இதுதான் உண்மை! இப்பொழுது பிள்ளைகளை கண்களை மூடிக்கொள் என்று சொல்லி ஜெபத்திலே அவர்களை வழிநடத்தலாம்.



# செயல்முறை விளக்கம்:

**தேவையானபொருட்கள் :**

1. வேஸ்ட் வாட்டர் பாட்டில்
2. எஃபர்வெசன்ட் டேபிலட்(effervescent tablet)
3. தண்ணீர்

வேஸ்ட் வாட்டர் பாட்டிலை அழுத்தி, நெரித்து பின் அதற்குள் எஃபர்வெசன்ட் டேபிலட்டை (effervescent tablet) இடித்து சேர்த்து அதனுள் தண்ணீர் கலந்து குலுக்கினால் நெளிந்த வாட்டர் பாட்டில் நேராகும்.

**விளக்கம் :**

நேராக நன்றாகப் படைக்கப்பட்ட நாம் பொய், கோபம் போன்று ஒவ்வொரு தவறு செய்யும்போதும் அழுத்தப்பட்டு, நெரிக்கப்பட்டு வடிவில்லாமல் போவதுபோலாகிறோம். மீண்டும் தேவனிடம் நம்மைக் கொடுக்கும்போது அவர் நம்மை மீண்டும் உருவாக்கவல்லவராயிருக்கிறார்.

# விளையாட்டு

## GIFT BOX



**நோக்கம் :** இயேசுவே நமக்கு சிறந்த வெகுமதி (யோவான் 3 : 16 )

**உபகரணம்:** வெறுமையானGift Box உள்ளே இயேசுவின் படம் மட்டும்.

**நபர்கள் :** எல்லாரும்.

**நிபந்தனைகள்:**

1. எல்லாரையும் வட்டமாகநிற்கச் செய்யவேண்டும்.
2. Gift boxஐ இசைக்கேற்ப ஒவ்வொருவரிடமும் மாற்றிக் கொண்டிருக்க வேண்டும்.
3. இசை நின்றவுடன் நடத்துபவர் Right என்றால் வலப்பக்கம் நிற்கும் ஐவர் அவுட். இதுபோல் Right..Left என்று மாறி மாறி சொல்லி அவுட் ஆக்கவும்.
4. கடைசியிலிருப்பவருக்கு பரிசளித்து, Gift box திறந்து இயேசுவின் படத்தைக் காட்டி போதிக்கவும்.

நாள் 2

# செப்பனிட்டதைக் காத்துக்கொள்

**வேதபகுதி**
**லூக்கா 5:1-15, 22:55-62**

**நோக்கம்**
தேவனால் செப்பனிடப்பட்ட நாம் அவரோடுள்ள உறவில் நிலைத்திருந்து, கீழ்ப்படியும்போது நம்மை காத்துக் கொள்ள முடியும்

## மனப்பாட வசனம்

**ஆரம்பநிலை:** "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்." (1பேதுரு 1:16)

**இளநிலை:** "நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார். (2 கொரிந்தியர் 9:8)

**கதை சுருக்கம்:**

தற்போது வட இஸ்ரேல் பகுதியில் கைஃபோ மாவட்டத்திலுள்ள கலிலேயா என்னும் பகுதியில் நடந்த உண்மை சம்பவம். இயேசு வாழ்ந்த காலத்தில் கலிலேயா ஒரு நாடாக கருதப்பட்டது. இங்கு கடல் இருந்தது. அந்தக் கடலுக்கு கலிலேயா கடல் என்பதே அதன் பெயர். அந்நாட்டில் கப்பர் நகூம் என்ற கிராமத்தில் யோனா என்கிற மனிதர் வாழ்ந்து வந்தார். அவருடைய மகன் சீமோன் என்பவர். இந்த சீமோன் மீன் பிடிப்பதிலே வல்லவர். அவருக்கு சொந்தமாக படகு மற்றும் வலைகள் இருந்தது . அந்த கலிலேயா கடலில் மீன் பிடித்து தனது வாழ்வை நடத்தி வந்தார். ஒருநாள் சீமோன் மாலை தொடங்கி காலை வரைக்கும் நைட் முழுவதும் மீன் பிடிக்க போய் ஒரு மீன் கூட அகப்படவில்லை. சோர்ந்த முகத்தோடு வலையை பழுது பார்த்து அழுக்குகளை கழுவிக் கொண்டிருந்தார். அப்பொழுது மக்கள் கூட்டத்தின் நடுவில் ஒருவர் வந்து கொண்டிருந்தார். சீமோனே உன் படகை கொஞ்சம் கொடு இந்தப் படகுல உட்கார்ந்து இந்த ஜனங்களுக்கு சில நல்ல காரியங்களை சொல்லிக்கொடுக்க வேண்டியது இருக்கு தருவியா ? என்று கேட்டார். சீமோனும் சரி என்றார். அந்தப் படகில் ஏறியவர் யார் தெரியுமா ? அவர்தான் நம்முடைய இயேசு கிறிஸ்து. அவர் ஜனங்களுக்கு நல்ல செய்திகளை சொல்லி நல்ல காரியங்களை அவர்களுக்கு போதித்தார். இதை சீமோனும் கவனித்துக் கொண்டிருந்தார். போதனை நேரம் முடிந்ததும் இயேசு சீமோனை பார்த்தார். என்ன சீமோன் கவலையாய் இருக்க மீன் ஒன்னும் கிடைக்கலையா ? உன் படகை ஆழத்துக்குக் கொண்டு போ அங்க போய் உன் வலையைப் போடு என்று இயேசு சொன்னார்.

ஆமா, நைட் முழுவதும் மீன்பிடிக்க போய் ஒன்னும் கிடைக்கல, ஆனாலும் நீங்க சொன்ன வார்த்தையை கேட்டு நான் போய் வலையைப் போடுகிறேன். சீமோன் படகை எடுத்துக்கொண்டு ஆழத்துக்குச் சென்று வலையை விரித்தார். என்ன ஆச்சரியம் பகல்ல மீனே பிடிக்க முடியாது. இவ்வளவு மீனா! அய்யய்யோ படகு பத்தலையே பக்கத்தில் இருந்த

படகையும் கூப்பிட்டார். நண்பர்களே வாங்க இந்த படகு பத்தல உங்க படகுகளிலேயும் இந்த மீன்களை எல்லாம் ஏத்துவோம். இரண்டு படகுகள் நிறைய மீன்களைப் பிடிச்சாங்க. சீமோன் கரைக்கு வருகிறார். இயேசுவை பார்க்கிறார். நீங்க ஒரு சாதாரணமான மனிதர் இல்ல நீங்க கடவுள் என்பதனை உணர்கிறேன்.உங்ககிட்ட நிற்கிறதுக்கு எனக்கு தகுதி இல்ல. தயவுசெய்து என்னை விட்டு நீங்க போங்க என்று இயேசுவிடம் சொன்னார். இயேசு சிரித்துக்கொண்டே அட சீமோனே இதுவரைக்கும் நீ மீன்பிடிச்ச உன்னை நான் மனுஷனை பிடிக்கிறவனாக மாற்ற போறேன். உடனே சீமோன் தன் படகையும் வலையையும் விட்டுவிட்டு இயேசுவுக்கு பின்னாடி போயிட்டார். இப்படி தனது முதலாவது சீடனாக சீமோனை தெரிந்து கொண்டார். அன்று முதல் சீமோன் வாழ்க்கையில ரொம்ப சந்தோஷம், சமாதானம் நல்ல குணங்கள் மற்றும் அவருக்குத் தேவையான நன்னடத்தைக்கான போதனைகளும் அவருக்கு கிடைத்தது. அவர் சந்தோஷமா இருந்தாரு மூன்றரை வருடங்கள் இயேசுவோடு கூட ஊழியமும் செய்தார். இவருக்கு இயேசப்பா பேதுருன்னு பெயர் வச்சாங்க. ஏன் தெரியுமா கற்பாறை என்று அர்த்தம். கற்பாறை எப்படி இருக்கும் ஸ்ட்ராங்கா இருக்கும். அப்படித்தான் அவர் சூப்பரா ஆயிட்டாரு. பேதுருவோடு சேர்த்து மொத்தம் 12 சீடர்கள் இயேசுவுக்கு இருந்தாங்க. இவர்கள் இயேசப்பா எங்க போனாலும் அவங்க பின்னாடியே போவாங்க இயேசப்பா சொல்றதெல்லாம் செய்வாங்க ஒரே ஜாலிதான். கவலை இல்லாத வாழ்க்கை சூப்பர்.

ஒரு நாள் இயேசு நான் சிலுவையில் மரிக்க போகிறேன். அது சீக்கிரத்தில் நடக்கப் போகுது அப்படின்னு சொல்லி தன்னுடைய சிலுவை மரணத்தை தன் சீடர்களுக்கு சொன்னாரு, இதைக் கேட்ட உடனே பேதுருவுக்கு கோபம் வந்திருச்சு. இயேசப்பா நீங்க சிலுவையில் இறக்கக் கூடாது. ஒருவேளை நீங்க இறந்துட்டீங்கன்னா நான் உங்க கூட செத்துருவேன். அப்படின்னு பேதுரு சொல்ல பேதுருவே நீ தப்பு தப்பா பேசுற நீ அப்படியெல்லாம் மாற முடியாது. நான் சிலுவையில் இறந்தால்தான் இந்த உலகத்திற்கு மீட்பை கொண்டு வர முடியும். நீ புரியாமல் பேசாதன்னு சொன்னாங்க. பேதுரு சொன்னாங்க நான் நிச்சயமா உங்களுக்காக என் உயிரையே கொடுப்பேன். இயேசு பேதுருவைப் பார்த்து நீ என்னை மூன்று முறை மறுதலிப்பாய் என்றார். பார்க்கலாம் என்று பேதுருவும் பின் தொடர்ந்தார். இயேசு சொன்ன மாதிரியே அவரை சிலுவையில் அடிச்சு கொல்றதுக்கு அவர பிடிச்சுக்கொண்டு போவதற்கு அந்தக் காலத்திலேயே இயேசுவை எதிரியாக நினைச்ச சில மனுசங்க வந்தாங்க இயேசப்பாவை பிடிச்சுட்டு போனாங்க.

அப்போ பேதுருவும் அவங்களை பின் தொடர்ந்து போனாரு இயேசுவை அடிச்சு துன்புறுத்தினாங்க. அந்தக் கூட்டத்திலிருந்து ஒரு அக்கா இந்த பேதுருவும் இயேசு கூட இருந்தவர் தான் இவரை நான்

பார்த்து இருக்கேன் என்று  சொன்னவுடனே பேதுரு என்ன செய்தார் தெரியுமா ஐயோ இந்த இயேசு எனக்கு யாருனே தெரியாது.  இவரை நான் முன்ன பின்ன பார்த்ததே இல்லன்னு சொல்லி,  மூன்று முறை அவரை யாருனே தெரியாதுன்னு சொல்லி சத்தியம் பண்ணாரு, கெட்ட வார்த்தையில் அவரை திட்டினாரு. ஆனால் இயேசப்பா ஒண்ணுமே சொல்லல, அவர பார்த்தாரு, அவர் பாக்குறத பார்த்தவுடனே பேதுருவுக்கு மனசுல அழுகையா வந்துருச்சு. ஐயோ இயேசப்பாக்காக உயிரைக் கொடுப்பேன். நான் அவரோட கூட இருந்து அவருக்காக அடி வாங்குவேன் என்று சொன்ன நான் அவரை யாருன்னு தெரியாதுன்னு சொல்லி அசிங்க, அசிங்கமா பேசிட்டு இருந்தேனே நெனச்சு  மனசுல காயத்தோடு தப்பு பண்ணிட்டேன்னு அழுதாரு. இயேசப்பாவ சிலுவை மரத்தில் அவர் கையையும் காலையும் கட்டி வச்சி அடிச்சாங்க. இயேசப்பா துடி துடிச்சி சிலுவையில் இறந்து போனாங்க.  இயேசப்பாவை ஒரு கல்லறையில் கொண்டு போய் அடக்கம் பண்ணாங்க. ஆனா மூணாவது நாள் இயேசப்பா உயிரோடு வந்துட்டாங்க. உயிரோடு வந்த இயேசப்பா என்ன நெனச்சாங்க தெரியுமா? இந்த பேதுருவை தேடி வந்தாங்க. எதிரில் நீ என்ன யாருன்னு தெரியாதுன்னு பொய் சொன்னியே பாத்தியா நான் உயிரோடு வந்துட்டேன் அப்படின்னு காண்பிக்கப் போகல. பேதுரு என்னை நினைத்து அழுதுகிட்டே இருப்பான்.  ஐயோ பாவம் அழாத நான் உயிரோட வந்துட்டேன்னு சொல்றதுக்காக போனாங்க. பேதுரு அண்ணனுக்கு ரொம்ப சந்தோஷம். இயேசப்பாகிட்ட போறதுக்கு அவருக்கு கூச்சமா இருந்துச்சு. இயேசப்பா அவர கூப்பிட்டு பக்கத்துல வச்சுக்கிட்டாங்க. என்னை நேசிக்கிறியானு கேட்டாங்க. நான் உங்கள ரொம்ப நேசிக்கிறேன் சொன்னாங்க. அப்போ என் ஆட்டுக்குட்டிய மேய்ப்பாயா? என கேட்டாங்க.  பேதுரு அண்ணனும் அழுதுகிட்டே சரிங்க இயேசப்பானு சொன்னாங்க. இயேசப்பா அவங்கள கொண்டு பெரிய காரியங்களை செஞ்சாங்க. பேதுருவின் நிழல் பட்டு செத்துப் போன நபர்களை தேவன் உயிரோடு எழுப்பினாங்க. வியாதியா இருக்கிறவங்க மேல எல்லாம் கை வச்சா அவங்களுக்கு சுகம் வந்துச்சு. அவங்க எங்கெல்லாம் போய் இயேசப்பா பத்தி பிரசங்கம் பண்ணாங்களோ அங்கெல்லாம் திறள் கூட்டமான ஜனங்கள் இயேசப்பா பிள்ளையா மாறுனாங்க. பேதுரு அண்ணே இயேசப்பாக்காக நான் சொன்னது போல தன் உயிரையே கொடுத்தாங்க. அன்பான பிள்ளைகளே!  இயேசு உன்னை நேசிக்கிறார். அவர் உங்களுக்காக ஒரு திட்டம் வச்சிருக்காரு அந்தத்திட்டத்துக்கு உங்களை அர்ப்பணிங்க உங்கள உலகத்தின் வெளிச்சமாய் இயேசப்பா மாத்திடுவாரு.  கண்ணை மூடி ஜெபிக்க சொல்லி அவர்களை நடத்தவும்.



# செயல்முறை விளக்கம்:

**தேவையானபொருட்கள் :**

1. கண்ணாடிடம்ளர்–2
2. தண்ணீர்
3. உப்பு
4. கலர்

இரண்டு கண்ணாடி டம்ளரில் தண்ணீர் வைத்துக் கொள்ளவேண்டும். அதில் ஒன்றில் ஒரு ஸ்பூன் நிறை யஉப்பு சேர்த்து நன்கு கலந்து விட்டு, இரண்டு டம்ளரிலும் கலர் சேர்த்தால் உப்புகலக்காத தண்ணீரில் கலர் முழுவதும் பரவி விடும். உப்பு கலந்த நீரில் கலர் பரவாமல் மிதக்கும்.

**விளக்கம் :**

தேவனால் செப்பனிடப்பட்ட நாம் ஜெபித்து, வேதம் வாசித்து அவருடன் இணைந்து இருந்தால் உலகில் உள்ள பாவங்கள் நம்மைக் கறைப்படுத்தாது.

# விளையாட்டு

## TOSS GAME



**நோக்கம் :** பண ஆசை எல்லாதீமைக்கும் வேராய் இருக்கிறது.(1 தீமோ. 6 : 10)

**உபகரணம் :** இரண்டு 1 ரூபாய் Coin

**நபர்கள் :** அனைவரும்.

**நிபந்தனைகள் :**

1. விளையாடும் அனைவரும் அவர்களின் விருப்பத்திற்கேற்ப இரண்டு கைகளையும் இடுப்பில் வைக்கலாம் அல்லது இரண்டு கைகளையும் தலையில் வைக்கலாம் அல்லது ஒரு கை தலையிலும் ஒரு கை இடுப்பிலும் வைக்கலாம்.
2. நடத்துபவர்கள் இரண்டு பேர் 1 ரூபாய் Coinஐ ஒன்றாக சுண்டிவிட வேண்டும்.
3. இரண்டு Coinலும் தலை விழுந்தால் இரண்டு கைகளை தலையில் வைத்தவர் out.
4. இரண்டு coinலும் பூ விழுந்தால் இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்தவர் out.
5. ஒரு Coinல் பூவும் ஒரு Coinல் தலையும் விழுந்தால் ஒருகையை தலையிலும் ஒருகையை இடுப்பிலும் வைத்தவர்கள் out.
6. கைகளை (position) மாற்றுவது விளையாடுபவர் விருப்பம்.
7. இறுதிவரை விளையாடுபவர் வெற்றி பெறுவார்.

நாள் 4
3

# நண்பர்களைச் செப்பனிடு

வேதபகுதி
யோபு
1,2&42 அதி.

நம்முடைய நண்பர்களுக்காக, உறவினர்களுக்காக நாம் ஜெபிக்கும்போது, கர்த்தர் நம்மையும் நம் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பார்.

நோக்கம்

**மனப்பாட வசனம்**

**ஆரம்பநிலை:** "சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்." (நீதிமொழிகள் 17:17)

**இளநிலை:** "நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால் பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறார். (யோவான் 16:27)

**கதை சுருக்கம்:**

ஊத்ஸ் தேசத்திலே யோபுனு ஒரு uncle இருந்தாங்க. அவங்க ரொம்ப ரொம்ப நல்லவங்க. தேவனுக்கு எப்பவுமே பயந்து நடப்பாங்க. அதுமட்டுமா அவங்கள குறித்து தேவன் என்ன சொல்லியிருக்கிறாங்க தெரியுமா? அவங்க உத்தமனும், சன்மார்க்கனும் பொல்லாப்புக்கு விலகுகிறவங்களுமா இருந்தாங்களாம். பாத்தீங்களா! எல்லா கெட்ட காரியத்திற்கும் விலகியிருந்தாங்க. அவங்களப்போல அந்நாட்களில் பூமியில் யாருமே இருந்தது இல்லையாம். அந்த யோபுuncle பெரிய பணக்காரங்க. அவங்களுக்கு 7000 ஆடு, 3000 ஒட்டகம், 500 ஏர் மாடு, 500 கழுதைகளுமாகிய மிருக ஜீவன்கள் இருந்துச்சு. இந்த மிருகங்களை எல்லாம் பராமரிக்க திரளான வேலைக்காரங்க இருந்தாங்க. அந்த uncle க்கு ஏழு பையன்களும், மூன்று பெண்பிள்ளைகளும் இருந்தாங்க. யோபு uncle தன் குடும்பத்தோடு சந்தோஷமா வாழ்ந்து வந்தாங்க. அது மட்டுமல்ல அனுதினமும் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிறவங்களா இருந்தாங்க. ஏன்னா அவங்க பிள்ளைங்க தேவனுக்கு பிடிக்காத காரியத்தை செய்துவிடக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தார். யோபு uncle தேவனை அதிகமாக தேடுவது சாத்தானுக்கு பிடிக்கவில்லை. அவனை எப்படியாவது தேவனை விட்டு பிரிக்க நினைத்தான். யோபுவை சோதிக்க தேவனிடத்தில் போய் உத்தரவு கேட்டான். தேவன் யோபுவின் மேல் வைத்த நம்பிக்கையினால் அவனுக்கு உத்தரவு கொடுத்து உன் கையில் இருக்கிறான், அவன் உயிரை பிராணனை மாத்திரம் தப்பவிடு என்றார். சாத்தான் கர்த்தருடைய சந்நிதியை விட்டு புறப்பட்டு தன் வேலையை ஆரம்பிக்க தொடங்கினான்.

முதலாவது யோபு uncleன் பிள்ளைகள் எல்லாரும் தனது மூத்த சகோதரன் வீட்டில் விருந்து சாப்பிட்டு கொண்டிருக்கும்போது பெருங்காற்று வீட்டின் நான்கு மூலையிலும் அடிக்க வீடு இடிந்தது. எல்லோரும் செத்துப் போனார்கள் மற்றும் அவருடைய ஒட்டகம், ஆடு, மாடு, கழுதைகள் எல்லாம் ஒரே நாளில் செத்துப் போனது. அப்படியிருந்தும் யோபு uncle தேவனைக் குறை சொல்லவில்லை. பின்பு யோபு uncle உள்ளங்கால் தொடங்கி அவர் உச்சந் தலை மட்டும் கொடிய பருக்களால் அவரை வாதித்தான் அந்த சாத்தான். உடம்பெல்லாம் அரிப்பு தாங்க முடியாத யோபு uncle தரையில்

உட்கார்ந்து, ஒரு ஓட்டை எடுத்து தன்னை சுரண்டிக் கொண்டிருந்தார். ஆனாலும் அவர் ஒரு பாவமும் செய்யவில்லை. தேவனை தூஷிக்கவும் இல்லை. ஆளே உருவம் தெரியாமல் மாறிவிட்டார். இதைப் பார்த்த யோபுவின் மனைவி இவரைப் பார்த்து தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றாள். இவரது நண்பர்களான தேமானியனான எலிப்பாசும், சூகியனான பில்தாத்தும், நாகமாத்தியனான சோப்பாரும் ஆகிய மூன்று பேரும் யோபுவின் நிலைமையை அறிந்து அவரைப் பார்க்க வந்தனர். வந்த நண்பர்கள் மூன்று பேரும் பின்பு அவரை குற்றஞ்சாட்டிக் கொண்டேயிருந்தார்கள். அவரோடு கூட தரையில் இரவு, பகல் ஏழு நாள் உட்கார்ந்திருந்தார்கள். யோபு uncle தனது நண்பர்களின் வார்த்தையைக் கேட்டு, அவர்கள் மேல் கோபப்படாமல் அவர்களை வெறுக்காமல், அவர்களுக்காக ஜெபித்தார். கர்த்தர் அந்த ஜெபத்தைக் கேட்டு யோபுவின் சிறையிருப்பை மாற்றி, இரட்டைத்தனையாய் அவரை ஆசீர்வதித்தார்.



# செயல்முறை விளக்கம்:

**தேவையானபொருட்கள் :**

1. கண்ணாடி கிண்ணம்
2. லெட் பென் (Ballpoint Pen)
3. தண்ணீர்

ஒரு லெட் பென்னில் உள்ள லெட்டை எடுத்து அதில் முன்னுள்ள நிப்பை நீக்கிவிட்டு ஒரு கண்ணாடி கிண்ணத்தில் உள்ள தண்ணீரில் வைக்கும்போது அது வைத்த இடத்தை சுற்றி பரவும்.

**விளக்கம் :**

அதேபோல் செப்பனிடப்பட்ட நாம் இவ்வுலகத்தில் நம்மை சுற்றியுள்ள நண்பர்களுக்கு அவரை காண்பிக்கிறவர்களாக அவர்களும் செப்பனிடப்பட வழிகாட்ட வேண்டும்.

# விளையாட்டு

## வசனத்தைச் சேர்த்தல்



**நோக்கம் :** தேவனுடைய சத்தியம் விலையேறப் பெற்றது. (சங்கீதம் 119 : 105)

**உபகரணம் :** பலூன் (வசனங்களுக்குஏற்ப)

**நபர்கள் :** அனைவரும் (4 குழுக்கள்)

**நிபந்தனைகள் :**

1. பலூனில் வசனத்தை தனித்தனி வார்த்தையாக எழுதி உள்ளே வைத்து விடவேண்டும்.
2. குழுவில் உள்ளவர்கள் பலூன்களை ஊதி வெடித்து வசனத்தை சரியாக இணைக்க வேண்டும்.
3. முதலில் இணைத்து அறிவிப்பவர் வெற்றி பெற்றவர்.

நாள் 4

# குடும்பத்தைச் செப்பனிடு

வேதபகுதி
ஆதியாகமம்
37, 50:1-11

நோக்கம்

செப்பனிட்டதை காத்துக் கொண்ட நீ உன் குடும்பத்திற்காக ஜெபித்து, குடும்பத்தினர் முன் சாட்சியாக வாழ வேண்டும்.

**மனப்பாட வசனம்**

**ஆரம்பநிலை:** "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்." (அப். 16:31)

**இளநிலை:** "நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான்." (யோசுவா 24:15)

**கதை சுருக்கம்:**

குட்டிப் பிள்ளைகளே, உங்களுக்கு இன்னைக்கு ஒரு சூப்பரான சம்பவம் சொல்லப்போறேன். ரொம்ப வருஷங்களுக்கு முன்னாடி நடந்த ஒரு உண்மை சம்பவம் தான் இது. அந்த குடும்பத்துல எத்தனை பிள்ளைகள் இருந்தாங்க தெரியுமா?. 12 பிள்ளைங்க! அதுல பதினோராவதா பிறந்தாங்க யோசேப்பு அண்ணன். இவங்கதான் நம்ம ஹீரோ. யோசேப்பு அண்ணன் அப்பாவிற்கு மிகவும் செல்ல பிள்ளை. அவருடைய அப்பா அவருக்கு colourfulஆன dress வாங்கி கொடுத்து அழகு பார்ப்பார். ஆனால் அவருடைய அண்ணன்மார்களுக்கு யோசேப்பை கொஞ்சம் கூட பிடிக்கவே செய்யாது. ஏனெனில் அவர்கள் செய்யும் சேட்டைகளை, தவறுகளை அப்பாவிடம் சொல்லிக் கொடுப்பான். அப்போது தானே அவங்க எல்லாம் சரியாவாங்க. ஆனா அண்ணன்மார் நெனச்சாங்க இவன் நம்மள அப்பா கிட்ட போட்டுக் கொடுக்கிறான். நமக்கு திட்டுவாங்கி தருகிறான் என்று யோசேப்பு மீது அதிக கோபம் கொண்டார்கள். யோசேப்பின் 10 சகோதரர்களும் ஆட்டு மந்தைகளை மேய்க்க வெகு தூரம் பிரயாணப்பட்டு சென்றார்கள். அவர்கள் போய் அனேக நாட்கள் ஆனதால் அவர்களை விசாரிக்க யோசேப்பிடம் உணவு கொடுத்து அனுப்பி வைத்தார் அப்பா. யோசேப்பு தூரத்தில் வருகிறதை சகோதரர்கள் கண்டு அதோ நம் தகப்பனின் செல்ல மகன் வருகிறான். அவன் இருக்கும் வரை நம்முடைய தகப்பன் நம்மை கவனிக்க மாட்டார் என்று சொல்லி அவனை கொலை செய்ய திட்டமிட்டார்கள். ஆனால் ஒரு அண்ணன் ரூபன் நாம் அவனை கொலை செய்ய வேண்டாம். ஒரு ஆழமான குழியில் போட்டு விடுவோம். அவன் உணவு, தண்ணீர் இல்லாமல் மறித்து விடுவான் என்று சொன்னான். திட்டம் நல்லது என்று எண்ணி, அவனை குழியில் போட முடிவு செய்தார்கள். இதை அறியாத யோசேப்பு சிரித்துக்கொண்டே அண்ணன்மார்களை விசாரித்தான். சகோதரர்கள் அவன் மீது பாய்ந்து அவனை குழியில் தள்ளினார்கள். யோசேப்பு கதறி அழுததை சகோதரர்கள் கண்டு கொள்ளவில்லை. அந்த வழியாக வந்த எகிப்து தேசத்து வியாபாரிகளிடம் யோசேப்பை 20 வெள்ளி

காசுக்கு விற்று போட்டார்கள். யோசேப்பு அடிமையாய் எகிப்து தேசத்திற்கு கொண்டு போகப்பட்டான். சகோதரர்கள் யோசேப்பின் வஸ்திரத்தில் ஆட்டு ரத்தத்தை பூசி தகப்பனிடத்தில் கொண்டு வந்து காட்டு விலங்குகள் அடித்து கொன்றுவிட்டது என்று பொய் சொன்னார்கள். தகப்பன் யோசேப்பை இழந்ததை நினைத்து அழுதார். எகிப்துக்குக் கொண்டு போகப்பட்ட யோசேப்போடு ஆண்டவர் இருந்ததால் அந்த தேசத்து அதிகாரிகளின் கண்களில் இரக்கம் கிடைக்க செய்தார். போத்திபார் என்பவரின் வீட்டில் வேலை பார்த்தான். அங்கு கர்த்தருக்கு பயந்து பாவத்திற்கு விலகி, தன்னைக் காத்துக் கொண்டான். போத்திபாரின் வீட்டில் வந்த தவறான குற்றச்சாட்டினிமித்தம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டான். அங்கும் கடவுள் அவனோடு இருந்ததால் எகிப்து ராஜாவின் கண்களில் தயவு கிடைத்தது. எகிப்து தேசத்திற்கு அதிகாரியாக உயர்த்தப்பட்டான்.

ராஜா தனக்கு அடுத்த ஸ்தானத்தை யோசேப்பிற்கு கொடுத்தார். அந்நாட்களில் தேசமெங்கும் ஏழு வருடம் கொடிய பஞ்சம் உண்டானது. தேசம் முழுவதும் தானியங்கள் இல்லாமல் போனது. ஆனால் எகிப்து தேசத்தில் யோசேப்பின் அறிவுரையின் படி தானியங்களை அதிகமாக சேர்த்து வைத்திருந்தார்கள். தேசம் எங்கும் இருந்து ஜனங்கள் தானியங்களை விலைக்கு வாங்குவதற்கு எகிப்திற்கு வந்தார்கள். அங்கு அதிகாரியாக இருப்பது தங்கள் சகோதரன் தான் என்பதை அவர்கள் அறியவில்லை. ஆனால் யோசேப்பு அவர்களை இனம் கண்டு கொண்டான். தனக்கு தீமை செய்த சகோதரர்களை பழிவாங்காமல் அவர்கள் மீது அன்பு செலுத்தி அவர்களை ஆதாயப்படுத்தினார். மன்னிப்பு மற்றும் அன்பினால் குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் சரிப்படுத்தினார். பின் அவர்கள் குடும்பமாய் எகிப்தில் குடியிருந்தார்கள்.

அன்பு தம்பி தங்கச்சி யோசேப்பு அண்ணனைப் போல் நாமும் நம் உடன் பிறந்தவர்களிடம் தீமைக்குத் தீமை செய்யாமல் நன்மை செய்து அவர்கள் வாழ்வை அன்பினால் சரிப்படுத்த வேண்டும். இன்றைய காலங்களில் சொத்துக்காக சொந்த சகோதரர்களை கொலை செய்வது, பெற்றோரை கொலை செய்வது போன்ற பாவங்கள் குடும்பத்தில் பெருகிவிட்டது. குடும்பத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அன்பு செலுத்த வேண்டும் உங்களுக்காக உயிரைக் கொடுத்த இயேசுவின் அன்பு உங்கள் இருதயத்தை நிரப்ப வேண்டும். அப்போதுதான் உங்கள் தனிப்பட்ட வாழ்வு செப்பனிடப்படும். உங்கள் குடும்பமும் செப்பனிடப்பட்டு தேவனுக்குப் பிரியமான குடும்பமாக காணப்படும். கர்த்தர் உங்கள் குடும்பத்தை ஆசீர்வதித்து சந்தோஷத்தையும், சமாதானத்தையும் தந்து வழிநடத்துவார்.



# செயல்முறை விளக்கம்:

**தேவையானபொருட்கள் :**

1. பேப்பர்
2. தீக்குச்சி
3. காம்பஸ்
4. கண்ணாடிடம்ளர்

பேப்பர் எடுத்துக் கொண்டு அதன் ஒரு ஓரத்தின் நடுவில் தீக்குச்சியை வைத்து சுற்றிக் கொள்ள வேண்டும். பின் அதனை காம்பஸ் எடுத்து விரித்து அதன் நடுவில் வைத்து அழுத்தி பிடித்துவிட்டு, மருந்து இருக்கும் பாகம் மேல் இருக்கும்படி டம்ளரின் குறுக்கே வைத்து தாளில் தீப்பற்ற வைத்தால் தீக்குச்சியில் உள்ள மருந்து எரியும். அப்போது புகை டம்ளருக்குள் வரும். அதேபோல் தேவனால் செப்பனிடப்பட்ட நாம் நம் குடும்பத்தார் முன் சாட்சியாக வாழவேண்டும். அவர்கள் எல்லாரும் செப்பனிடப்பட உதவி செய்ய வேண்டும்.

# விளையாட்டு



## J.J.J

**நோக்கம் :** கேட்பதில் எச்சரிக்கை (எபிரெயர் 2 :1)

**நபர்கள் :** அனைவரும்.

**நிபந்தனைகள் :**

1. நடத்துபவர் எருசலேம் என்று சொன்னால் பிள்ளைகள் கரங்களை கோபுரம் போல் உயர்த்தி காண்பிக்க வேண்டும் – எருசலேமில் (Jerusalem) தேவாலயம் உள்ளது.
2. யோர்தான் (Jordan) என்றால் நதி ஓடுவதுபோல் கரங்களை காண்பிக்கவேண்டும்.
3. எரிகோ (Jerico) என்றால் கீழே உட்காரவேண்டும். எரிகோ மதில் இடிந்து விழுந்ததுபோல்.
4. நடத்துபவர் மாறி மாறி கூறவும், தவறாக செய்யவும் வேண்டும். கவனித்து கடைசிவரை சரியாக விளையாடும் ஒருவருக்கு பரிசு வழங்கப்படும்.

நாள் 5

# கிராமத்தைச் செப்பனிடு

**வேதபகுதி**
மாற்கு 5:1-20

**நோக்கம்**
தேவன் உனக்குச் செய்த நன்மைகளை பிறருக்குச் சொல்ல வேண்டும்

## மனப்பாட வசனம்

**ஆரம்பநிலை:** "நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப்போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவி." (மாற்கு 5:19)

**இளநிலை:** "சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் ராஜரீகம்பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன. (ஏசாயா 52:7)

**கதை சுருக்கம்:** ஐயா யாரும் அந்த பக்கமா போக வேண்டாம் இரும்பு சங்கிலிகளை வைத்துக் கட்டினால் கூட அவனை அடக்க முடியாது. பிரேத கல்லறை தான் அவன் வீடு. பிசாசு பிடித்த மனிதன் அவனைப் பார்த்தாலே பயமாக இருக்கும். அது மட்டுமல்ல மலைகளிலும், கல்லறைகளிலும் இருந்து கொண்டு சத்தம் போட்டு கத்துவான். கல்லுகளினால் தன்னையே காயப்படுத்திக் கொள்வான். இவன் கடற்கரை பக்கத்திலுள்ள கதரேனர் என்ற நாட்டில் வாழ்ந்து வந்தான். இவனைப் பற்றிய செய்தி சுற்றுப்புற பட்டணமெங்கும் தெரியவந்தது. இதனால் அவனைப் பார்க்கவோ அந்த வழியாக நடந்து போகவோ எவரும் விரும்புவதில்லை.அவன் மேல் இரக்கப்பட்டவர்கள் அவனை சங்கிலிகளினாலும், விலங்குகளினாலும் அடிக்கடி கட்டிப்போட்டிருந்தும் அதையெல்லாம் ஒரு நொடியில் தகர்த்துப் போட்டு விடுவான். அவனை யாராலும் காப்பாற்ற முடியவில்லை. ஒரு நாள் அந்த வழியே இயேசு வந்தார். பிரேதக் கல்லறைகளிலிருந்து அசுத்த ஆவி பிடித்த அந்த மனிதன் இயேசுவுக்கு எதிராக வந்தான். தூரத்தில் வரும்போது ஓடி வந்து இயேசுவைப் பணிந்து கொண்டான். அசுத்த ஆவியே இந்த மனிதனை விட்டுப் போ என்று கட்டளையிட்டார். இயேசுவே உன்னதமான தேவனுடைய குமாரனே, என்னை வேதனைப்படுத்தாதிரும் என்று சத்தமிட்டு கத்தினான். அந்த மனிதனிடம் உன் பேர் என்னவென்று கேட்ட இயேசுவுக்கு பிசாசு பதில் சொல்ல ஆரம்பித்தது. நாங்கள் அநேகராக இருக்கிறபடியால் என் பேர் லேகியோன் என்று சொல்லி அந்த திசையிலிருந்து எங்களை அனுப்ப வேண்டாம் என்று வேண்டிக்கொண்டான். மலையருகே நிறைய பன்றிகள் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன. அதற்குள் அனுப்பும்படி திரும்பவும் வேண்டிக் கொண்டான். உடனே இயேசு உத்தரவு கொடுத்தார். இரண்டாயிரம் பன்றிகளுக்குள் அசுத்த ஆவிகள் போய் கடலிலே பாய்ந்து செத்துப் போயின. பன்றி மேய்த்தவர்கள் ஓடி இந்த காரியத்தை பட்டணங்களிலும் சுற்றுபுறங்களிலும் அறிவித்தார்கள். இதையறிந்த ஜனங்கள் பார்க்கும்படி வந்திருந்தார்கள்.

பிசாசு பிடித்திருந்தவன் வஸ்திரம் தரித்து, உட்கார்ந்து, புத்தி தெளிந்திருக்கிறதை கண்டு பயந்தார்கள். சந்தோஷப்பட வேண்டிய ஜனங்கள் இயேசுவை தங்கள் எல்லைகளை விட்டுப் போகும்படி வேண்டிக்கொண்டார்கள். இயேசு படவில் ஏறுகிற போது பிசாசு பிடித்தவனும் அவரோடு இருக்கும்படி கேட்டுக் கொண்டான். Ok சொல்லாத இயேசு நீ உன் குடும்பத்தில், கிராமத்திலுள்ள சொந்த ஜனங்களுக்கு கர்த்தர் உனக்கு இரங்கி உனக்கு செய்தவைகளை எல்லாம் அறிவிக்க வேண்டுமென்றார். இயேசு சொன்னபடியே தெக்கப்போலி என்ற நாட்டிலுள்ள கிராமம், பட்டணங்களில் எங்கும், இயேசு செய்தவைகளை சொல்லத் தொடங்கினான். எல்லாருமே ஆச்சரியப்பட்டு போனார்கள். அவன் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றம் அனேக ஜனங்களை கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை வைக்கும்படி செய்தது.



# செயல்முறை விளக்கம்:

**தேவையானபொருட்கள் :**

1. ஈனோ
2. பலூன்
3. வாட்டர் பாட்டில்
4. தண்ணீர்

ஒரு வாட்டர் பாட்டிலில் பாதியளவு தண்ணீருடன் எடுத்துக் கொள்ளவேண்டும். பின்பு ஈனோவை பலூனில் போட்டு பலூனை பாட்டிலின் வாயில் மாட்டி விடவேண்டும். ஈனோ பாட்டிலினுள் விழுந்தவுடன் அது பொங்கி, அதனால் பலூனில் காற்று நிரம்பி பலூன் பெரிதாகும்.

**விளக்கம் :**

அதேபோல் செப்பனிடப்பட்ட நீ உன் கிராமத்திற்காக ஜெபிக்கிற ஜெபம் மற்றும் தேவன் செய்த நன்மையை சொல்வதன் மூலம் கிராமத்தில் உள்ளவர்கள் இயேசுவை அறிவர்.

# விளையாட்டு

## நண்டு போல் நட



**நோக்கம் :** நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவு சரியாக இருந்தால்தான் இலக்கை அடைய முடியும். (யோவான் 15 : 5)

**உபகரணம் :** பலூன் (Big size)

**நபர்கள் :** 2 பேர் கொண்டநான்குகுழுக்கள்.

**நிபந்தனைகள் :**

1. ஒரு குழுவுக்கு, ஒரு பலூனை மட்டும் கொடுக்கவேண்டும்.
2. ஒரு பலூனை இருவர் முதுகில் வைத்து பக்கவாட்டில் நடக்கவேண்டும், பலூனையும் கீழே விடக்கூடாது, வெடிக்கவும் கூடாது.
3. முதலில் வரும் குழு வெற்றி பெற்றது.

# மிஷனெரி வாழ்க்கை வரலாறு



# ஃபிலிப் ஜேம்ஸ்எலியட்

ஜிம் எலியட் என்று அழைக்கப்படும் ஃபிலிப் ஜேம்ஸ் எலியட், ஃபிரெட் எலியட் மற்றும் கிளாராவின் மூன்றாவது குழந்தை. கர்த்தருடைய பயத்தில் வளர்க்கப்பட்ட அவர் வேதாகமத்தை தவறாமல் படிக்க ஊக்கப்படுத்தப்பட்டார். மிஷனெரிகளைப் பற்றி கேட்டு வளர்ந்த ஜிம், அவரும் ஒருநாள் மிஷனெரியாக வேண்டும் என்ற வாஞ்சை கொண்டிருந்தார். போர்ட்லேண்டில் உள்ள பென்சன் பாலிடெக்னிக் உயர்நிலைப் பள்ளியில் கட்டடக்கலை வரைதல் (ஆர்கிடெக்ச்சரல் ட்ராயிங்) படித்த அவர், அங்குள்ள மாணவர்களுக்கு முன்னால் ஒரு முன்மாதிரியான கிறிஸ்தவ வாழ்க்கையைக் காட்டினார். பின்னர் அவர் வீட்டன் கல்லூரியில் பயிலும் போது, 1948 ஆம் ஆண்டில் இல்லினாய்ஸ் பல்கலைக்கழகத்தில் நடந்த சர்வதேச மாணவர் மிஷனெரி மாநாட்டில் கலந்து கொண்டார். அந்நேரத்தில் தென் அமெரிக்காவின் காடுகளில் வாழும் பழங்குடியினருக்கு நற்செய்தியை எடுத்துச் செல்ல வேண்டிய அவசியத்தை அவர் உணர்ந்தார். பின்னர் அவர் 1950 ஆம் ஆண்டில் 'வில்லியம் கேமரூன் டவுன்செண்டின்' 'கேம்ப் விக்லிஃப்பில்' சேர்ந்து, உள்ளூர் மொழியை எழுத்து வடிவ சின்னங்களாக மாற்றுவது எப்படி என்று கற்றுக்கொண்டார். அங்கிருக்கும்போது ஈக்வடாரில் உள்ள ஆக்கா இந்தியன்ஸைப் பற்றி கேள்விப்பட்ட ஜிம் அவர்கள், அம்மக்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க கர்த்தர் தன்னை அழைக்கிறார் என்பதை உணர்ந்தார்.

பல மாதங்கள் ஜெபத்தில் காத்திருந்த பிறகு, ஜிம் தனது நண்பர் பீட் ஃப்ளெமிங்குடன் 1952 ஆம் ஆண்டில் ஈக்வடார் அடைந்தார். முன்பாக அவர்கள் ஷாண்டியா மிஷன் ஸ்தாபனத்தில் இருந்து, கெச்சுவா இந்தியன்ஸிடையே பணியாற்றினர். அங்கு செய்த ஒரு பயனுள்ள ஊழியத்திற்குப் பிறகு, ஹூரானி பழங்குடியினரைச் சந்திக்க ஜிம் தயாரானார். 'கொடூரமானவர்கள்' என்று பொருள்படும் 'ஆக்கா' என்று அழைக்கப்படும் இந்த பழங்குடியினர் மிகவும் ஆபத்தானவர்களாக கருதப்பட்டனர். எனவே, அவர்களுடன் நட்பு கொள்வதற்காக, எட் மெக் கல்லி, ரோஜர் யூடெரியன், பீட் ஃப்ளெமிங் மற்றும் அவர்களது விமான ஓட்டி (பைலட்) நேட் செயிண்ட் ஆகியோருடன் இணைந்து விமானத்திலிருந்து வாளியில் பரிசுகளை வழங்கி பல மாதங்கள் முயன்றார் ஜிம். தங்கள் ஆரம்ப முயற்சிகளில் வெற்றிபெற்ற அவர்கள், இனி பழங்குடியினரை சந்திக்க முடியுமென்று நினைத்து, ஆகா பழங்குடியினரின் இடத்திற்கு அருகில் இறங்கினர். நான்கு நாள் காத்திருந்தப் பிறகு, பழங்குடியினரை சேர்ந்த நான்கிவி என்ற நபர் வேறு இரண்டு பெண்களுடன் அவர்களை சந்தித்தார். மிஷனெரிகள் அவர்களுடன் நட்பு கொள்ள முயன்றனர். ஆனால் நாகரீகத்தை அறியாத அப்பாவி மக்கள் அந்த மிஷனெரிகளை தங்களுக்கு அச்சுறுத்தலாக கருதினர். அந்த மூன்று பழங்குடியினர்கள் திரும்பிச் சென்று மற்றவர்களிடம் ஒரு தவறான செய்தியைக் கொடுத்ததால், ஆறாம் நாளில் அந்த ஐந்து மிஷனரிகளை பழங்குடி மக்கள் தாக்கி, கொடூரமாகக் கொன்றார்கள்.என்றபோதிலும் ஆக்கா மிஷன் இத்துடன் முடிவு பெறவில்லை, இது ஒரு ஆரம்ப நிகழ்வு மட்டுமே. இந்த சம்பவம் நடந்த இரண்டு வருடங்களுக்குள், ஜிம்மின் மனைவி எலிசபெத் எலியட், அவர்களின் மகள் வலேரியுடன் தனது கணவர் இறந்த அதே கிராமத்திற்கு சென்று சேவையைத் தொடர்ந்தார். எலிசபெத்தின் விலைமதிப்பற்ற எண்ணில்லாத சேவைகள் மூலம் கணக்கற்ற ஆக்கா மக்கள் கிறிஸ்துவிடம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

# மாணவர் வருகைப் பதிவேடு

| வ. எண் | பெயர் | நாள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

# கிராம மிஷனெரி இயக்கம்

கிராம மிஷனெரி இயக்கம் 1996ம் ஆண்டு சகோ.K.டேவிட் கணேசன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. தற்சமயம் தமிழ்நாடு, ஆந்திரா, ஒரிஸா ஆகிய மாநிலங்களில் சபைபாகுபாடின்றி குழு ஊழியமாக செயல்பட்டு வருகிறது.

## தரிசனம்

✶ "என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக" என்ற வசனத்தின்படி கிராமங்களிலுள்ள சிறுவர் மற்றும் வாலிபர்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தி அவர்களின் மூலம் கிராமங்களை சுவிசேஷ மயமாக்குதல்.

✶ சந்திக்கப்படும் சிறுவர்கள் மற்றும் வாலிபர்களை நாளைய தலைவர்களாகவும், ஊழியர்களாகவும் உருவாக்குதல்.

✶ ஒவ்வொரு கிறிஸ்தவர்களையும் ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களாக மாற்றுதல்.

## நடைபெறும் ஊழியங்கள்:

இந்தியாவில் உள்ள கிராம சிறுவர்கள் மற்றும் வாலிபர்கள் மத்தியில் ஊழியங்கள், சுவிசேஷக்குழுக்கள் மூலமாக கிராம நற்செய்தி ஊழியங்கள், திரைப்பட ஊழியம், இராக்லாண்டு வேதாகமக்கல்லூரி, தோழமை மிஷனெரிகள், தெபோராள் மிஷனெரிகள், பள்ளி ஊழியங்கள், மருத்துவமனை ஊழியம், பசித்தோருக்கு உணவளித்தல், வட்டார ஜெபக்குழுக்கள், சுவிசேஷ மற்றும் சீஷத்துவ முகாம்கள், "மோட்சப்பயணம்"-மாதாந்திர தினதியான இதழ், "கண்மணியே கேள்", "யோசுவாவாவே எழும்பு" - வாலிபர்களுக்கான பத்திரிக்கை வெளியிடுதல் மற்றும் டிவி ஊழியங்கள்.





**கிராம மிஷனெரி இயக்கம்**

6/147, மல்லிகை தெரு, மதுரை ரோடு, விருதுநகர் - 626 001.
தமிழ்நாடு, தென்இந்தியா.

CELL : 04562-246500, 73780 00444 • E-mail: info@vmm.org.in